

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## 'தாழ்மையில்' கெம்பீரிக்கும் இயேசுவின் இரட்சிப்பு!

**க**ட்டுகள் நிறைந்த மனுஷருக்கு, இரட்சகராய் உதித்தார் இயேசு! தன் உயிர் தந்து, இரத்தம் சிந்தி, 'மானிடருக்கு' பாவ மன்னிப்பையும் இரட்சிப்பின் வழியையும் உண்டாக்கினார்! ஆகிலும், நாம் ''முற்றும் முடிய இரட்சிக்கப்பட'' தன் ஜீவிய வழியையும் காண்பித்தார்! 'மானிடன்' ஆகிய யாவருக்கும் முன்னோடியாய், அவர் தன்னை தாழ்த்தினார் என்பதே ''நாம் முற்றும்முடிய இரட்சிக்கப்பட'' அவர் காண்பித்த ஜீவ வழியாகும்!

மரியாளின் ''அடிமையின் தாழ்விடத்தை (Lowly)''தேவன் நோக்கிப் பார்த்தார்! (லூக்.1:48). தேவன் தன் குமாரனாகிய இயேசுவை ''ஆசீர்வதித்து உயர்த்திட'' இந்த தாழ்விடமான மாட்டுக்குடில் மாத்திரமல்ல.... மனுஷரால் அசட்டை செய்யப்பட, புறக்கணிப்பட, நெருக்கப்பட, ஒடுக்கப்பட..... அனுமதித்து, அதற்கு இயேசு மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தபடியால், ''பிதாவின் கரத்தில் உண்டான சகல ஆசீர்வாதமும்'' அவருக்கு வாய்த்திடச் செய்தார்! என ஏசா.53:10 கூறுவதை கவனியுங்கள்! மனுபுத்திரராகிய நாம் கர்த்தரிடம் பெற்றிடும் ஆசீர்வாதமும், இரட்சிப்பும் ''தாழ்மையின் சந்தர்ப்பத்தில்'' மாத்திரமே உண்டு என அறிந்து, குருவின் தாழ்மை அடிச்சுவட்டில், மகிழ்வுடன் நடப்போமாக!

*-tr*

பெட்டகம் 20 | டிசம்பர் 2018 | பரல்கள் 12



## 'கிருபையை' காம விகாரத்திற்கு மாற்றுவதை, இயேசு வெறுக்கிறார்!

ஒன்று இருந்தால், மற்றொன்று இல்லை என்பதே மானிடம்! ஆனால், 'கிருபையின்' பெருக்கத்தில் மனதுருக்கம் கொண்ட இயேசுவோ 'சத்தியத்தில்' கெர்ஜிக்கும் யூத பாலசிங்கமாய், பக்தி வைராக்கியத்தில் பட்சிக்கும் அக்கினியாயும் நிறைந்து வாழ்ந்தார்!

தெய்வ கிருபையை போற்றிப் புகழ்ந்துவிட்டு, பாவத்தில் தொடர்ந்து வாழ்வதற்கே 'தெய்வ கிருபையை' நாடுவோரை, இயேசு இன்றும் மறுக்கிறார்! "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, நான் உன்னை ஆக்கினைக்குள்ளாய் தீர்ப்பதில்லை....... ஆகிலும், ஸ்திரீயே, இனி பாவம் செய்யாதே!" என முழங்கும் இயேசு நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார்!! (யோவான்.8:11,12).

தெய்வ கிருபையை, தங்களுக்கேற்றபடி காம விகாரத்திற்கு புரட்டும் 'கொடிய காலம்' இது! பிலாத்துவின் கோர்ட்டில் "சத்தியவானாய்!" நின்றவரை...... பொய்யே நிறைந்த அந்த வழக்கு மன்றத்தில் "சத்தியமா......?" என வியந்து நோக்கினான் நீதிபதி பிலாத்து!! (யோ.18:37,38). தன் வீட்டிலும் சபையிலும் "சத்தியத்திற்கு சாட்சியாய்" வாழும் மாந்தரே "சத்திய ஆவியை" பெற்றவர்கள்!! சத்தியத்திற்கு ஊறுவிளைவிக்கும் 'ஒத்த வேஷம்' நிறைந்த இந்நாட்களில்..... சத்தியம் பேசும், சத்திய மாந்தரே இன்றைய நமது தேவை!!

*-Ed*

### 2019 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **டிசம்பர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3** பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal

## “சபையின் வீழ்ச்சி” ஓர் எச்சரிக்கை!

*தங்கள் ஸ்தாபனங்களைவிட்டு வெளியேறிய அநேக விசுவாசிகள் “புதிய ஏற்பாட்டின் மாதிரியை” பின்பற்ற விரும்பி, அவர்களின் உபதேசங்கள் அனைத்தும் மிகச் சரியாக இருந்தாலும் “பணத்தை நேசித்து! தங்களுக்கானத்தை நாடி!” அதோடு சேர்த்து ‘கிறிஸ்துவின் சரீரத்தை’ தாங்கள் கட்டுவதாகவும் எண்ணிக் கொள்கிறார்கள்! இவ்விதமான அவர்களுடைய பிரயாசங்களில் குழப்பமும், ஒழுங்கின்மையுமே நிலவுகிறது! அவர்கள் கட்டியவைகள், முடிவில் மற்றொரு பாபிலோனாய் மாறுகிறது!*

**ஒரு மனிதன், தனக்கானதை தேடாதிருப்பதை தேவன் காணும் போது மாத்திரமே, அங்கு அவர் தன்னுடைய உண்மையான சபையைக் கட்ட முடியும். இதுபோன்ற “தேவனுடைய இருதயத்தின் பாரத்தை ஜனங்களோடு பகிர்ந்துகொள்ளும்” ஒரு மனிதன் போதும்! அந்த ஒரு மனிதன்.... ‘வெறும் புதிய உடன்படிக்கை தாற்பரியங்களை பின்பற்றுவதாகக்கூறும்’ ஆயிரம் அரைகுறை விசுவாசிகளை வைத்து கட்டிய ஊழியனைக் காட்டிலும், அந்த மனிதனே தேவனுக்கு அதிக மதிப்புடையவர்!**

*இயேசுவின் நாட்களில், அவர் கண்களை ஏறிட்டுப் பார்த்து “ஒரு மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல்” ஜனங்கள் இருப்பதையே கண்டார். அதே நிலைதான் இன்றுமுள்ளது. எங்கும் நிறைந்த தேவையாய் இருப்பதெல்லாம் “தேவனுடைய இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்களே” ஆவர்!*

*யோசுவா ஒரு தேவ பக்தியான மனிதன்! அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோது, இஸ்ரவேலுக்கு மிக அருமையான தலைமைத்துவத்தை ஏற்று நடத்தினார்! அவர் தன் முழு குடும்பத்தோடும் .... மற்ற இஸ்ரவேலர்கள் கர்த்தரை விட்டு தூரம் சென்றிட தீர்மானித்தாலும், தன் முழு குடும்பமாய் கர்த்தரையே சேவிக்க தீர்மானம் கொண்டிருந்தார் (யோசுவா.24:15). இவ்வாறு ‘தேவையானால்’ தான் மாத்திரம் தனியாய் நிற்பதற்கும் துணிந்த ஒரு மனிதனே “தேவபக்தி நிறைந்த தலைமைத்துவத்தை, எந்த ஒரு சபைக்கும்” இன்று, கொடுத்திட*

*முடியும். ஆகவேதான், யோசுவாவின் ஜீவிய காலத்தில், இஸ்ரவேல் தொடர்ச்சியான ஜெயத்தில் முன்னோக்கிச் சென்றது!*

*ஆனால், யோசுவா மரித்து விட்டார்! அவருக்குப் பிறகு என்ன நடந்ததோ, அதுவேதான் இப்போதும் நடப்பதை நாம் காண முடிகிறது. ஆம், ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட தேசத்தில் தேவன் ஒரு மனிதனை எழுப்பும்போது.... அவர் தன்னுடைய பூமிக்குரிய ஓட்டத்தை முடித்து கடந்து சென்று விடுகிறார்!*

*நியாயாதிபதிகள் புத்தகத்தில், இஸ்ரவேல் எவ்வாறு வீழ்ச்சி அடைந்தது? என வாசிக்கிறோம். யோசுவாவின் தலைமையின் மூலமாய் பெற்ற வேகத்தை, இரண்டாவது சந்ததி கொஞ்சகாலம் மாத்திரமே வைத்திருந்து ஜீவித்தார்கள்! அதன்பின்பு அவர்கள் விக்கிரகாராதனைக்குள் வீழ்ந்தார்கள்! யோசுவாவின் காலத்தில், இஸ்ரவேல் 'ஒரு ரயில்வண்டி' தன் வல்லமையான என்ஜினைக் கொண்டு குன்றின்மேல் இழுத்து செல்லப்பட்டதைப்போல் இருந்தது. யோசுவா மரித்தவுடன், என்ஜின் துண்டிக்கப்பட்டு போனது! அதன்பிறகு, ரயில் வண்டியை இணைத்துச் செல்ல, வேறொரு என்ஜின் இல்லை! ஆகவே அந்த ரயில்வண்டி மெல்ல பின்வாங்கி, நின்று.... குன்றின் அடிவாரத்திற்கு உருண்டு, நொருங்கிப் போனது!*

**ஒவ்வொரு சந்ததியிலும், தேவனுக்காக முழு இருதயமாய் நிலைநின்ற அவருடைய 'மிகக் குறைந்த அளவு' ஜனங்களைக் கொண்டு, தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதை 'சபையின் சரித்திரம்' மறுபடியும் மறுபடியுமாக நிரூபித்துள்ளது!**

*அதுபோன்ற தேவபக்தியான 'குறைந்த ஜனங்கள்' தவறாய் கணிக்கப்பட்டு, கிறிஸ்தவ ஸ்தாபன நிறுவனங்களால் துன்புறுத்தப் பட்டனர்! அன்று சவுல் தாவீதை துன்புறுத்தியதைப் போலவே 'தங்கள் காலத்தில் தேவன் என்ன செய்கிறார்?' என்ற யாதொரு அறிவும் இல்லாத ஜனங்களால் துன்புறுத்தப்படுகின்றனர்!*

*தேவனோ, தாவீதைப் பாதுகாத்து, அவனோடு இருந்த ஒரு சிறிய குழுவையும் பாதுகாத்து, அவன் இஸ்ரவேலின் இராஜாவாய் 40 ஆண்டுகள் அரசாண்டான்! அவனுடைய அரசாட்சியைக் குறித்து* **''தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தான்!''** *என எழுதப்பட்டுள்ளது (அப்.13:36). இங்கு, தாவீது தேவனுடைய சித்தத்தை* **''தன் சந்ததியில் மாத்திரமே''** *நிறைவேற்றினான் என கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்!*

*அவனுடைய மரணத்திற்குப் பிறகு, வீழ்ச்சி வேகமாய் நிகழ்ந்து விட்டது! அவனுடைய மகனாகிய சாலமோன் மோசமான பின்மாற்றம் அடைந்து, பேரழிவில் முடிந்தான். ஆரம்பத்தில், தன்னுடைய தேவ பக்தியான தகப்பனிடமிருந்து பெற்ற உற்சாகத்தைக் கொண்டு, முன்னேறிச் சென்றான். ஆனால் அதே முன்னேற்றத்தின் திசையில் தொடர்ந்து செல்வதற்கு,*

**“தேவன் மீது அப்படி ஒரு தாகம் இல்லாதபடியால்” ஆஸ்தியினாலும், ஸ்திரீகளாலும் வழிதவறிப் போனான் (1இராஜா.10:23; 11:1-9). அன்றுபோலவே, அநேக கிறிஸ்தவ பிரசங்கிகள் ‘இன்றும்’ இருக்கிறார்கள்!**

*இவ்வாறாக தாவீதின் - சாலோமோனின் சரித்திரத்தில் நாம் கண்ட அதே வீழ்ச்சி, இன்றும் கிறிஸ்தவத்தில் மீண்டும் மீண்டும் சம்பவிக்கிறது. தேவனோடு இணைந்து ஓர் நல்ல இயக்கமாக அல்லது கிறிஸ்தவ ஸ்தாபனமாக துவங்கியவர்கள்.... அவர்களின் இரண்டாவது அல்லது அதற்கு அடுத்த சந்ததியில் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதை கவனித்துப்பாருங்கள். அநேகமாக எல்லா இடங்களிலும், நான் கூறியதைப்போல் அவர்கள் வீழ்ச்சியின்படியில் இருக்கிறார்கள் என்ற உண்மையை காண்பீர்கள். இவ்வாறு ஏன் சம்பவித்தது? அதன் விடை எளிதாகவே இருக்கிறது: அந்த விசுவாசிகள், ‘தனி நபராகிய இயேசு கிறிஸ்துவிடம்’ ஈர்க்கப்படாமல், வேத வாக்கிய எழுத்திற்கே முக்கியம் தர ஆரம்பித்து விட்டார்கள். எங்கெல்லாம் ‘கிறிஸ்துவின் மீது கொண்ட தனிப்பட்ட அன்பின் தியானத்தைவிட’ உபதேசங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆவிக்குரிய வீழ்ச்சி துவங்கி, சுய நீதியும்! பரிசேயத்துவமும்! நிலை கொண்டுவிடும்.*

*பவுல் எபேசுவை விட்டுப் போகும்போது, அங்குள்ள மூப்பர்களை எச்சரித்து “நான் போன பின்பு, மந்தையை தப்ப விடாதபடி கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்! உங்களில் சிலர் எழும்பி சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளை போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்” (அப்.20:29,30) என கூறினார்.*

**பவுல் அங்கு இருந்த காலம் வரை, எபேசு மந்தையில் ஒரு ஓநாய்கூட உள்ளே பிரவேசிக்கத் துணியவில்லை! ஏனென்றால், பவுல் ஓர் கண்டிப்பான வாசல் காப்பவராய், கர்த்தரிடமிருந்து ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றவராயும் இருந்தார் (மாற்கு.13:34).**

*ஆகிலும், அங்கிருந்த மூப்பர்கள், அவரைப்போல் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்தவர்களாய் இல்லை என்பதை'பகுத்துணர்ந்து' அறிந்தார். ஆகவேதான், தான் அங்கிருந்து சென்ற பின்பு, அவர்கள் சபையின் தலைமைத்துவத்திற்கு வந்தவுடன்,* **வெகுசீக்கிரத்தில் சபை சிதைவடையும்!** *எனவும் அறிந்திருந்தார்.*

*எபேசு சபைக்கு என்ன நடக்கும்? என்பதற்கு "ஓநாய்கள் உள்ளே வரும்!" என்ற ஒரு தீர்க்கதரிசனத்தை அந்த மூப்பர்களுக்கு பவுல் தரவில்லை! அப்படி நிச்சயமாய் இல்லை!* **அவர் கூறியது ஒரு 'எச்சரிக்கையே' ஆகும்!** *அங்குள்ள மூப்பர்கள் தங்களையே நியாயந் தீர்த்து, மனந்திரும்பி வாழ்ந்திருந்தால் 'பவுல் எச்சரித்தைப் போல்' நடந்திருக்காது! நினிவேயின் அழிவை, யோனா பிரசங்கித்தான். ஆனால், அவன் முன்னுரைத்ததைப்போல் சம்பவிக்கவில்லை! ஏனென்றால், நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பி விட்டார்கள்! அதுபோலவே எபேசிலிருந்த சபையும் மனந்திரும்பி விட்டால், பவுல் முன்னுரைத்த வீழ்ச்சியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்! ஆனால் அங்கிருந்த மூப்பர்களோ, பவுலின் எச்சரிப்பை 'சீரியஸாக' எடுத்துக் கொள்ளாதபடியால், அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிச் சென்றார்கள்.*

*ஐம்பது வருடங்களுக்குப் பின்பு, எபேசு சபை, உண்மையாகவே ஒரு மோசமான நிலைக்கு வந்துவிட்டது. அவர்களுடைய உபதேசங்கள் இன்னமும் சரியாகவே இருந்தது! அவர்கள் இன்னமும் கிறிஸ்தவ ஊழியங்களில் வைராக்கியம் கொண்டிருந்தார்கள்! அவர்களுடைய முழு நேர ஜெப கூட்டங்களும், அவர்களுடைய விசேஷித்த கூட்டங்களும், தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது. ஆனால், அவர்களின்* **ஆவிக்குரிய நிலையானது** *மிக மோசமாய் மாறியபடியால் 'அவர்களை ஒரு சபையாய் வைத்திருந்த தன்னுடைய அங்கீகாரத்தை' கர்த்தர் எடுத்துப்போடும் எல்லைக்கு வந்துவிட்டது!*

**அவர்கள் இழைத்த தவறு என்ன? அவர்கள், கர்த்தர் மீது கொண்டிருந்த தங்களது அன்பின் தியானத்தை இழந்துவிட்டார்கள்! (வெளி.2:4,5).**

*எபேசு சபையின் சரித்திரம் நமக்கு போதிப்பது என்னவென்றால், எந்த உபதேசமோ அல்லது மார்க்க ஊழியங்களோ "கர்த்தர்மீது கொண்ட ஊக்கமான அன்பின் தியானத்தைவிட" முக்கியமானதல்ல! ஆவிக்குரிய தன்மையின் அடையாளம் ஒன்றே ஒன்றுதான்: இயேசுவின் ஜீவன், நம்முடைய வாழ்க்கையில் அதிகஅதிகமாய் பெருகுவதேயாகும்! இது போன்ற வளர்ச்சி, "ஆண்டவர்மீது கொண்ட தனிப்பட்ட தியானத்தில்"* **நாளுக்கு நாள்** *பெருகுவதின் மூலமே சாத்தியமாகும்! (2கொரி.11:3).*

*– சகரியா பூணன்*

## ‘என் கணவரின் மரணம்’ நேசரின் உறவை புதுப்பித்தது!

***நா****ன் ஒரு அரச பரம்பரையைச் சேர்ந்தவளாயிருந்தபடியால் ‘வறுமை என்ன என்பது’ எனக்குத் தெரியாது. வறுமையிலும் தேவன் வாசம் செய்கிறார் என்பதை நான் அறிந்திருந்தபடியால், நான் ஏழ்மையை விரும்பி இருந்தேன்! ஆனால், என் ஜீவியத்தின் பின்னணி இளவரச அரண்மனையின் பங்காய் இருந்தபடியால், அது எனக்கு கிட்டவில்லை!*

*ஆகிலும், நான் திருமணமாகி சுமார் 12 வருடங்களாய் தேவன் எனக்கு அருளிய ‘ஏராளமான சிலுவைகளை’ என் மனதார ஏற்று, அவர் தந்த சிலுவையின் மூலமாய் தேவனைக் கண்டு, அவரோடு உறவாடி மகிழ்ந்தேன்! ஒவ்வொரு சமயத்திலும், முந்தின சிலுவையைக் காட்டிலும், புதிதாய் நான் சந்திக்கும் சிலுவையின் பாதை அதிக கடினமாய் இருப்பதையே கண்டேன்! என் ஜீவியத்தை, பிறருக்கு சாட்சியாக எழுத வேண்டுமென்று என்னை வற்புறுத்திய ஆவிக்குரிய நண்பர்களைப் பார்த்து “சிலுவைக்கு மேல் சிலுவையும், அதிக அதிகமான நெருக்கத்தின் வழியே என் ஜீவியம்!” எனக்கூறி “இதையே என் ஜீவியமாய் எழுதுவேன், உங்களுக்கு சம்மதமா?” என்றே கேட்டேன்.*

**ஏனெனில் என்னுடைய வாழ்விற்கு மாத்திரமல்லாமல், உத்தம கிறிஸ்தவ ஜீவியத்தை நாடும் அனைவருக்குமே சிலுவையின் வழியைத்தவிர வேறொரு ‘ஜீவ வழி’ இல்லவே இல்லை!**

*ஒரு சிலுவையின் அனுபவம் கடந்தவுடன், மற்றொரு அனுபவமாய் நான் சந்தித்த சிலுவையின் ஜீவியம், முன்பிருந்த சிலுவையின் ஜீவியத்தை விட அதிக கடினமான பாதையாகவே அனுபவித்து, நான் முன்னேறி நடந்து வந்தேன்!*

*இந்நிலையில், எனக்கு ஆதரவாய் ஜெபித்த நிர்வாகத் தலைவியும், ஆலோசனை தந்த சில சகோதரிகளும், இன்னும் சில ஆவிக்குரிய மூத்த நண்பர்களும், ஒருவர் பின் ஒருவராக மரித்துப்போனார்கள். நானோ இப்போது துன்ப நேரத்தில் தனித்து நின்றதைப்போல் உணர்ந்தேன்.... இவ்வாறு, துன்பத்தின் உச்சகட்டம் என்னை பேதலிக்கச் செய்தது! நான் கர்த்தரின் சமூகம் சென்று உணர்வடைந்து, என் பேதலிப்பை அகற்றி, ஆண்டவரை உறுதியாக பற்றிக் கொண்டேன்!*

**இவ்வாறு நான் சீரடைந்தப் பிறகே, என் கணவரின் சோகத்தை தாங்கிக்கொள்ளும்படியான சம்பவத்தை தேவன் அனுமதித்தார்!** *என் கணவரின் சரீர சுகம் நாளுக்கு நாள் பின்னடைந்து, மரண தறுவாய்க்கு*

சென்றுவிட்டது. என் உறவினர்களும், நண்பர்களும் என் கணவரின் சுகவீனத்தை விசாரிக்க வந்தார்கள். அச்சமயத்தில், என் கணவரின் படுக்கைக்கு என்னை நெருங்கவிடாமல், என் மாமியாரே நின்றார்கள். அங்கிருந்த அனைவரும் என் மாமியாரின் கரிசனையான பராமரிப்பை போற்றிப் புகழ்ந்தார்கள்.

**அச்சமயத்தில் என்னிடத்தில் வந்த ஒரு சிநேகிதி "தூக்கம் ஏதுமின்றி, இப்போதுதான் பிறந்த உன் மூன்றாவது கைக்குழந்தையையும் வைத்துக்கொண்டு, கண்ணீரோடு உன் கணவரை விசாரித்த உன்னைக் குறித்து ஒருவர்கூட யாதொன்றும் பேசவில்லை" என கூறிச்சென்றார். இதுபோன்ற நல்ல தருணமே "இனி நான் அல்ல, இயேசுவே!" என என்னை முற்றிலும் இழக்கச்செய்யும் வாய்ப்பாய் பெற்றுக் கொண்டேன்!**

*என் கணவரின் மரணதறுவாயில்கூட, என் மாமியார் என்னை விரோதித்தது மாத்திரமல்லாமல், என் கணவரின் அல்லது அவருடைய மகனின் மனதில், என் மீது காட்டும் வெறுப்பை அதிகஅதிகமாய் என் மாமியார் தூண்டிவிட்டதுதான், எனக்கு அதிர்ச்சி மிகுந்த ஆச்சரியத்தைக் கொண்டு வந்தது! என் கணவரின் மரண சமயத்தில், நான் அவருக்குப் பணிவிடை செய்யும் நேரத்திற்காக ஜெபித்தேன்!*

*கர்த்தர் ஏற்படுத்தித்தந்த ஒரு சூழ்நிலையில், மரித்துக் கொண்டிருந்த என் கணவரின் அறையிலிருந்து மாமியார் வெளியே போய்விட்டார். நான் உடனே அந்த அறைக்குச் சென்று என் கணவரின் படுக்கை அருகே முழங்கால்படியிட்டு அவருக்காக வேதனையோடு ஜெபித்தேன்.*

**காலமெல்லாம் என்னை வெறுத்த என் கணவர், திடீரென்று என் கரத்தைப் பிடித்து, மனம் வெதும்பி "நீ என்னை தயவாய் மன்னிக்க வேண்டும்!**

*......நான் உனக்கு ஏராளமான துன்பங்கள் ஏற்படுத்தி விட்டேன்! உன்னைப் போன்ற ஒரு பக்தியுள்ள பெண்மணிக்கு ஒரு கணவனாய் உன்னோடு வாழ நான் சிறிதுகூட தகுதியற்றவன்!" எனக் கூறி, மேலும் என்னைப் பார்த்து "நீ எல்லோரையும் நேசித்து நம்புகின்ற உள்ளம் படைத்தவள்! ஆனால் நீ நம்புகின்ற அவர்கள், நல்லவர்கள் அல்ல என்பதை நான் இப்போது அறிந்து கொண்டதுபோல, நீயும் அறிந்து கொள்ள வேண்டும்! என் மரணத்திற்குப் பிறகு நீ அவர்களை முழுமை யாய் நம்புவதை தவிர்த்து, கவனமாய் நடந்து கொள்!" என மிகுந்த அன்புடன்,* **திருந்திய முகப்பிரகாசத்தில்,** *மனம் உடைந்து பேசினார். நான் உடனே என் பணிப்பெண்களுக்கு கட்டளை கொடுத்து, பாரீஸ் நகரில் உள்ள மிகச் சிறந்த மருத்துவரை உடனே அழைத்து வர கூறினேன்.* **சில மணி நேரங்களுக்குப் பிறகு, எங்கள் அரண்மனைக்குள் மருத்துவர் பிரவேசித்த அதே நேரத்தில், என் கணவர் மரித்துவிட்டார்.** *1676-ம் வருடம்*

ஜூலை 21-ம் தேதி அதிகாலையில் அவருடைய மரணம் சம்பவித்தது.

அவர் மரித்த அடுத்த நாள், என்னுடைய அறைக்குள் சென்றேன்! கண்ணீருடன் முழங்காலிட்டு "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே! நீர் என்னுடைய மணவாளன்! **உம்மோடு கொண்ட என் திருமண உறவை** இன்று மீண்டும் புதுப்பித்துக் கொள்கிறேன்" என அர்ப்பணித்து ஜெபித்தேன். என் கணவரின் சடலத்திற்கு அருகில் நான் முழங்கால் படியிட்டு "ஓ என் தேவனே, என் கணவரோடு நான் கொண்டிருந்த உறவின் இணைப்பை நீர் எடுத்துக் கொண்டீர்! இதனிமித்தம் **என் உள்ளத்தில் ஏற்பட்ட துன்பத்தை 'ஸ்தோத்திர பலியாக' உமக்கு என் ஸ்தோத்திரங்களை காணிக்கையாய் படைக்கின்றேன்!** தயவாய் ஏற்றுக் கொள்ளும்!" எனவும் அர்ப்பணித்தேன். இந்த என்னுடைய ஜெபங்களின் விளைவாய், மிகப்பெரிய சமாதானமும் அமைதியும் என் உள்ளத்திற்குள்ளும், வெளியேயும் என்னை ஆண்டுகொண்டது.

துக்கநாள் அனுசரிப்பில் திரளான மக்கள் கூடி வந்திருந்தார்கள். நான் தனியாய் இருந்த அறைக்கு வந்த என் சிநேகிதி "கூடி வந்த அனைவருமே, உன் மாமியார் அவரது மகனை பராமரித்ததை மட்டுமே..... இன்னமும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என கூறினார். நான் அவளைப் பார்த்து மெதுவாக புன்னகை செய்தேன், பின்பு மௌனமா யிருந்தேன். ஆகிலும், என் உள்ளத்தில், ஆண்டவரை நோக்கி "என் கர்த்தாவே, நீர் காண்பித்து நடத்தும் நெருக்கத்தின் பாதையில் நான் தீவிரமாய் தொடர்ந்து செல்ல கிருபை செய்தருளும், அதுவே எனக்குப் போதும்!" என ஜெபித்து அவர் பாதத்தில் கண்ணீர் கசிந்தேன்!

– மேடம் குயான்

---

## 'முன்மாதிரி இல்லாத பிரசங்கம்' சபையை கெடுக்கும்!

**ச**பை சீர்திருந்த வேண்டும்! என்ற பேரார்வம் இல்லாமல், சபைக்காக ஜெபிப்பது வீண்! பின்மாற்றத்திலும், கீழ்ப்படியாமையிலும் வீழ்ச்சியடைந்திருக்கும் ஒரு சபைக்கு "தேவா, உம் சபைக்கு ஆசீர்வாதத்தை ஊற்றும்!" என ஜெபிப்பது வீணல்லவா? இயேசு வழிவகுத்த புதிய ஏற்பாட்டு சத்தியங்களுக்கே சபை திரும்பிவர வேண்டும்: வேறுபிரிந்த ஜீவியம்! பூரண கீழ்ப்படிதல்! தெய்வீக தாழ்மை! எளிமையான ஜீவியம்! வசனத்தின் ஆழம்! ஒழுங்கு நிறைந்த கட்டுப்பாடான ஜீவியம்! தேவபக்திக்கேற்ற தகுதியான உடை உடுத்துதல்! சிலுவையின் தீவிர வாழ்க்கை! ஆகிய இவையனைத்தும் முழுமையாய் சபைக்குத் திரும்ப வரவேண்டும். தேவ வைராக்கியத்தை இழந்து, சபையில் துர்நாற்றத்தைக் கொண்டுவந்து, சபையை கள்ளர்

குகையாக்கினவர்களை தலைகீழாக கவிழ்த்தி..... உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆளுகைக்கு சபையைக் கொண்டு வர துடித்து நிற்பவர்கள் வேண்டும்!

'எழுப்புதல் வேண்டும்' 'எழுப்புதல் வேண்டும்' என ஜெபிக்கும் கூட்டம் இல்லாமலா இருக்கிறது? ஆனால், எங்கே அந்த எழுப்புதல்?! ஆம், கிறிஸ்துவின் சுடர்விடும் ஜீவியம் சபையில் இல்லாமல், உங்கள் ஜெபத்திற்கு எந்த பதிலும் உண்டாகாது! அர்ப்பண ஜீவியத்திற்கு மாற்றாக ஜெபத்தைக் கொண்டு வந்து நிறைத்துவிடலாம் என எண்ணும் இன்றைய கிறிஸ்தவம் மனம் மாற வேண்டும். அர்ப்பண ஜீவியமும், கீழ்ப்படிதலும் சீர்குலையாமல் இருக்கும் ஸ்தலத்தில் மாத்திரமே, ஜெபத்திற்கு பலன் உண்டு!

இன்று சபையின் தலைவராய் நிற்பவர்கள்கூட, சபைக்கு கொண்டு வந்த 'காயங்கள்' ஏராளம் இருக்கிறது. சபைகளை கட்டுவதற்குப் பதிலாக, இவர்கள் கொண்டு வந்த 'காயங்கள்' துன்மார்க்கமல்லவா? இவர்களின் ஆத்திரங்களும், கோபங்களும், வெடுவெடுப்பான கசப்புகளும், மக்களை சாடும் கொச்சை வார்த்தைகளும்..... இன்னும் எத்தனையோ இவர்களின் மனுஷீக ஊழியங்களால், சபைக்கு சீரழிவைக் கொண்டுவந்துவிட்டார்கள்!

> **"இங்கு கிறிஸ்து உண்டோ?" என சத்தியம் தேடிவந்த மாந்தர்கள், முன் மாதிரியாய் இருக்க வேண்டிய தலைவர்களிடம், கிறிஸ்துவற்ற நிலை கண்டு சிதறிப்போய்விட்டார்கள்! "பரிசுத்த குலைச்சலான பரிசுத்த வான்கள்" சபையில் இருப்பதுதான், சபைக்கு ஏற்பட்ட பெரு நஷ்டம்!**

இன்றைய கிறிஸ்தவம், தன் நடக்கையில் சொற்பமாகவும், தங்கள் பேச்சில் நீண்டும் இருக்கிறார்கள்! பேச்சில் வலிமையாய் இருக்கிறார்கள், தங்கள் சொந்த கிரியையில் பெலவீனமாயிருக்கிறார்கள். மார்க்க சம்பந்தமான பேச்சுகளைப் பேசிவிட்டு, ஒரு முடிவை எடுக்கிறார்கள்! ஏனெனில், அதுதான் அவர்களுக்குத் தெரியும்! அதுவே அவர்களுக்கு எளிதாயிருக்கிறது. கிரியைகள் செய்து **திருஷ்டாந்தமாய் நிற்பது,** அதிக விலைக்கிரயம் கொண்டதாயிருக்கிறது.

உங்கள் ஜெபத்தில் "ஆண்டவரே, என் சிலுவையை அனுதினமும் சுமந்து வர எனக்கு உதவி செய்யும்" என ஜெபிப்பது எளிது! ஆனால் நிஜமாகவே சிலுவை எடுத்து, வாழ்வதுதான் இவர்களுக்கு கடினம்! செயல்பாடு இல்லாத வார்த்தைகளை திரும்பத் திரும்ப பேசுவதில், ஒரு போலியான திருப்தியும் அடைகிறார்கள். இன்று மார்க்க தலைவர்கள் பெரும்பாலோர், உலக-மோக சமரசத்தில், குளிர்ந்த இருதயம் கொண்டிருக்கிறார்கள். அல்லது, பேசிப்பேசியே, இறுமாப்புடன்

*வாழ்கிறார்கள்! இதை எப்படிக் கூறலாம் என்றால் "தகுதியில்லாத ஜீவியம் செய்து கொண்டு..... பிறருக்கு தகுதியான ஜீவியத்தை போதிப்பதாயிருக்கிறது!" இதுபோன்ற தீமையான 'அகந்தை' சபையின் வளர்ச்சிக்கு, எழுப்புதலுக்கு, பாதிப்பை ஏற்படுத்துகிறது!*

**கோதுமை மணிக்கும், பதருக்கும் உள்ள வித்தியாசம் நாம் காண வேண்டும்! மாம்சத்தின் வெளியரங்கத்திற்கும், ஆவியின் கிரியைக்கும் வித்தியாசம் காண வேண்டும்! போலியை விரும்பும் இந்த வஞ்சக காலத்தில் "பகுத்தறியும் வரமே" அவசரத் தேவையாயிருக்கிறது!**

*இந்த உலகமும் அதன் சிந்தையும் அத்தனை பொல்லாங்கா யிருக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட "ஆலயத்திலிருந்து தேவனுடைய மகிமை, வெளியே புறப்பட்டுச் சென்ற" கொடிய காலத்திலிருக்கிறோம். நமது சபை, அவரது அன்பும்! அவரது விசுவாசமும்! அவரது தாழ்மையும்! கொண்டு, பரிசுத்தத்தில் வழிந்தோடும் சபையாய் இருந்திட வேண்டும். தேவ பிரசன்னமே இன்று உண்மை சபையின் இன்றியமையாத அடையாளமாயிருக்கிறது!*

*இன்று சபையின் தேவை, உபதேசத்தை நிமிர்த்துவது அல்ல! அப்படியெல்லாம் நிமிர்த்தி நிமிர்த்தி 'பரிசேயத்துவத்தில்' சபை சீரழிந்து உள்ளது. அது அல்ல, தேவனைக் குறித்த தாகமும், ஆவிக்குரிய நீரோட்டமும் நிறைந்த சபையே நமது தேவையாயிருக்கிறது!*

*– A.W. டோசர்*

---

## 'துன்மார்க்கத்தை' மூடுவதற்கா தேவ கிருபைகள்?

*ஆண்டவருடைய அழைப்புக்கு அவர்கள் செவி கொடுக்காமலும், அவரை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாமலும் இருந்து கொண்டு,* **வீணாராதனை செய்து** *தங்களை வஞ்சித்துக் கொண்டிருக்கும் விசுவாசிகளின் கூட்டமே எங்கும் நிறைந்திருக்கிறார்கள்! அவர்கள் குணம் மாறவில்லை..... இவர்களைக் குறித்த தேவனின் மனபாரமோ: "உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு? அவைகள் எனக்கு அரோசிகமாயிருக்கிறது. உங்கள் காணிக்கை எனக்கு வேண்டாம். நீங்கள் தூபங்காட்டுவது எனக்கு அருவருப்பு. உங்கள் மாதப் பிறப்பையும், ஓய்வுநாளையும், சபை கூடுதலையும் நான் சகிக்க மாட்டேன்! அவைகளை என் ஆத்துமா வெறுக்கிறது! அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது! உங்கள் கைகளை விரித்தாலும், நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் அவைகளைக் கேளேன்! ஏனென்றால் நீங்கள் உங்கள் அக்கிரமங்களோடும் பாவங்களோடும் இவைகளை ஆசரிக்கிறீர்கள். தீமைகளைவிட்டு ஓயுங்கள், நன்மை*

*செய்யப் படியுங்கள், அப்பொழுது உங்களுக்கு இரங்குவேன்" என்கிறார் (ஏசா.1:11-17).* நமது சபைகளில் அநேகர் கிறிஸ்துவை *'ஜீவனுக்காக' (வாழ்க்கைக்காக) ஏற்றுக்கொள்ளவில்லை! ஆகவே தான், அவர்கள் குணம் மாறவில்லை. அப்படியிருந்தும், இவர்கள்* **ஆராதனைகளுக்குத் தவறுவதில்லை.** *ஆண்டவரை மனதில் பகைத்து ஏற்றுக்கொள்ளாமற் போகும் துன்மார்க்க கூட்டமும் சரி, அவரை வாயினால் புகழ்ந்து போற்றி விட்டு, பரிசுத்த ஜீவியத்தை புறக்கணிப்போரும் சரி, இந்த இரண்டு சாரரின் முடிவும் ஒன்றுதான்!*

**ஆண்டவர் நமக்கு நன்மையாக ஏற்படுத்தின கிருபையின் ஏதுகரங்களை தீமையாக்கி விட்டார்கள்! "கிருபை, கிருபை" என முழங்கி 'அவைகளை' தங்களின் பாவங்களுக்கு மூடலாக்கிக் கொண்டார்கள்!**

*சாத்தானுடைய தந்திரங்களை நாம் இன்னமும் அறியவில்லை: சர்க்கார் உத்தியோகஸ்தனான ஒரு ஐயா, உலக நேசமும், பெருமையும், பொருளாசையுள்ளவருமாயிருந்தார். ஆனால், ஆராதனைகளுக்கு ஒருக்காலும் தவறமாட்டார். கிறிஸ்துவைத் தன் ஜீவனாக அவர் ஏற்றுக்கொள்ளாததால், அவர் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதல் இல்லை!* **இவ்வாறாகவே, ஆராதனைகளை வைத்து அவருடைய பாவங்களுக்கு மூடலாக்கி அவரை சாத்தான் வஞ்சித்துக் கெடுத்தான்.** *ஒரு அம்மாள், ஒரு நாள் காலையில் அதிகமாகப் புலம்பிக் கொண்டிருந் தார்கள். ஏனென்று கேட்டதற்கு, அவர்கள்: என் வாழ்க்கையில் இரவில் வேதம் வாசிக்காமல் தூங்கப்போவதேயில்லை. நேற்று வேதம் வாசிக்கத் தவறிப்போனேனே ஐயோ என்றார்கள்! காலையிலிருந்து மாலைவரை அந்த அம்மாள் புருஷனோடும், மக்களோடும், வேலைக்காரரோடும் போடுகிற சண்டை கொஞ்சமல்ல! கோபமும் மூர்க்கமும் நிறைந்த மனுஷி! கிறிஸ்துவைச் சொந்தமாக ஏற்றுக் கொள்ளவுமில்லை, ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலுமில்லை.* **சாத்தான், வேதவாசிப்பை அவர்கள் பாவங்களுக்கு மூடலாக்கி,** *அந்த ஏழை ஆத்துமாவை வஞ்சித்துக் கெடுத்தான்! வேறொரு சபையான், இவன் கர்த்தருடைய மேஜையில் பங்குபெற தவறாது ஓடுவான்! ஆனால், அவன் வாய் திறந்தால், தூஷணம்! .....இன்னும் எத்தனையோ பாவங்கள் உண்டு! கேட்டால், நான் செய்கிற பாவங்கள் மன்னிக்கப் படும்படிதானே கர்த்தருடைய மேஜையில் சேருகிறேன் என்பான்!? கிறிஸ்துவை இவன் இரட்சகராக ஏற்றுக்கெண்டவனுமல்ல, ஜீவியத்தில் மாறுதல் அடைந்தவனுமல்ல! இவ்வாறு* **கர்த்தருடைய மேஜையை இவன் பாவங்களுக்கு மூடலாக்கி** *தன்னையே வஞ்சித்துக் கெட்டுப் போனான்!*

*இவர்களைப்போலவே ஆராதனைகளிலும், கர்த்தர் மேஜையிலும், வேதவாசிப்பு, ஜெபக்கூட்டங்களிலும் பற்றுதல் வைத்து, தங்கள் ஜீவியத்தை மாற்றி ரட்சிக்க வந்த ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள், கிட்டத்தட்ட எல்லா சபைகளிலும் இருக்கிறார்கள்! மேலும், ஆவிக்குரிய நன்மைகளை கொண்டுவரும் கிருபையின் எத்தனங்கள் இவர்கள் விஷயத்தில் வீணாயின! ஆண்டவர் நம்மைத் தேடிவந்த நோக்கம் இவர்களில் நிறைவேறவில்லை.*

*தங்கள் ஜீவியம் மாற்றப்பட வேண்டிய அவசியத்தை உணராமல், ஆலயத்திலும், ஆராதனைகளிலும், பண்டிகைகளிலும் பற்றுதல் வைத்திருந்த 'யூத ஜாதியார்' அழிந்தார்கள்! இன்றோ, "கிருபையை கொண்டு" தங்கள் பாவங்களுக்கு மூடலாக்கி கொண்டார்கள்! அவர்களுக்குள் மேன்மை பெற்ற போதகனாகிய நிக்கொதேமுவை ஆண்டவர் பார்த்து: "நீ மறுபடி பிறக்காவிட்டால், தேவ ராஜ்யத்தில் உனக்கு இடமில்லை" என்று சொன்னார்.*

**புறம்பான ஆசரிப்புகள் இனி வெளிப்படும் மகிமைக்கு நம்மைத் தகுதியாக்குவதில்லை. கிறிஸ்துவை அறிந்து, அவரில் அன்புகூர்ந்து, அவரில் "சீஷனாய்" நிலைத்திருக்கும் ஜீவியமே இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதம்!**

*கிறிஸ்து மார்க்கம், சத்திய மார்க்கமும் ரட்சிப்பின் மார்க்கமுமாயிருந்தும், ஜீவியத்தில் மாறுதல் இல்லாத பேர் கிறிஸ்தவர்கள் திரளாயிருப்பதால், மற்ற மார்க்கங்களைப் போலவே கிறிஸ்து மார்க்கமும் ஒன்றுதான்! என, பொதுவாய் ஜனங்கள் பேசும் கதியாகிப்போயிற்று!*

*வேத வாக்கியத்தின்படி, இரட்சிக்கப்பட்ட சபை மக்கள் மாத்திரமே, கிறிஸ்துவுக்குள்* "**ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாயிருந்தார்கள்**" *(அப்.4:32). இக்காலத்தில் எந்த சபையைக் குறித்து இப்படிச்சொல்லக் கூடும்? ஆண்டவருக்கு அருமையான மக்கள் மாத்திரமே, ஒருவரையொருவர் நேசித்து, ஒரு மனம் கொண்ட* **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாய்** *இருக்கிறார்கள்!*

*இவர்களே, பூமிக்கு உப்பாகவும், வெளிச்சமாகவும், கிறிஸ்துவின் நற்கந்தமாகவும், கனி நிறைந்தவர்களாகவும், கிறிஸ்துவின் சிந்தையால் நிறைந்து அவரது சாயலுக்கொப்பாக மறுரூபப்படுகிறவர்களாகவும்.... ஆண்டவர் வெளிப்படும்போது, அவரோடு கூட மகிமையில் பிரவேசிக்க ஆயத்தமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்! ஆமென்.*

*– பரமானந்தம் ஐயர்*

## துன்பத்தில் நம்மை சூழ்ந்து ‘நெருங்கி நிற்கும்’ தெய்வ அன்பு!

*என் ஆசிரம ஊழியத்தில் ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகள், என் உள்ளத்திற்கு சொல்லி முடியாத வேதனையைத் தந்தது. நான் ஊழியம் செய்த ஜனங்களின் எதிர்ப்பும், அவர்களுடைய கோபமும், நன்றியில்லாத செயல்களும், மாறி மாறி என் உள்ளத்தை வேதனைப் படுத்தியது! நானோ, மிகவும் தடுமாறி இளைத்துப் போனேன்! இந்த நிலையில்தான், ஒரு மாற்றுவழி திறந்ததை நான் கண்டேன்!*

*அந்த வழியில், ஆச்சரியம் நிறைந்த மிதமான காற்றுடன் தேவனுடைய ஒளி பிரவாகித்து வந்து என்னைத் தொட்டது! அந்த ஒளியை நோக்கி என் முகம் கவிழ்ந்து தாழ்த்தி “ஓ கர்த்தாவே, உம்முடைய பாதையை திறந்து உம்மண்டையில் என்னை ஈர்த்துக் கொண்டதற்கு நன்றி” எனக்கூறி ஆறுதலடைந்தேன்.*

**நம்மை முற்றிலும் அவருடையவர்களாய் மாற்றுவதற்கும், தெய்வ அன்பை நாம் நாடி அவரைத் தேடுவதற்கும், கடின சூழ்நிலைகளையே தேவன் கையாளுகிறார்! என்பதை இப்போது உணர்ந்தேன்.**

*அந்த இளைப்பாறுதலற்ற நேரத்தில், சிருஷ்டி கர்த்தாவிடம் நாம் திரும்பிய அதே நேரத்தில், அவருடைய அன்பின் ஆறுதல் நம் உள்ளத்தை உடனே நிறைத்துவிடும்! தேவன் தம்முடைய அன்பினால், நம்முடைய உள்ளத்தை நிரப்பிட மனதில்லாதவர்.... என எண்ணி, அவரது அன்பிற்காக ஏங்கி, நாம் கெஞ்சி ஜெபிக்க வேண்டும் என, அவர் ஒருபோதும் கடின மனம் கொள்வதில்லை!*

*அதற்கு மாறாக, ஒரு இருட்டு அறையின் கதவைத் திறந்து வைத்தவுடன், வெளிச்சமானது தங்கு தடையின்றி அந்த இருட்டு அறைக்குள் நுழைந்து பிரகாசத்தை மிளிரச் செய்கிறது! ஏனென்றால், நம் உள்ளத்திற்குள் வரவேண்டுமென தெய்வ அன்பிற்கு அப்படி ஒரு தீராத ஏக்கம் உள்ளது! ஓர் நீர்த்தேக்கத்தின் மடை கதவு எப்போது திறக்கும்? என காத்திருக்கும் பெருவெள்ளம், மடை திறந்த அடுத்த நிமிடமே, வறண்ட நிலத்தை குளிரச் செய்து நிறைத்து விடுகிறது! ஆகவே எங்கெல்லாம் துன்பம் நிறைந்திருக்கிறதோ, அங்கெல்லாம் இந்த தெய்வ அன்பின் ஆறுதலும் நம்மைச் சூழ நெருங்கி நிற்கிறது என்பதை அறிவோமாக!*

**ஒன்று நாம் செய்ய வேண்டும்! அவரிடம் திரும்பி ‘மடையை திறப்பதைப் போல்’ உங்கள் உள்ளத்தை திறந்து விடுங்கள்! வாழ்வின் வறட்சி எவ்வளவாய் இருந்தாலும், அவை அனைத்தையும் குளிரச்செய்து,**

**ஆறுதல் செய்திட, தெய்வ அன்பின் அரவணைப்பின் வெள்ளம் ஆயத்தமாகவே நிற்கிறது!!**

*உங்கள் அவிசுவாசம், பல சூழ்நிலைகளை உங்களுக்கு சுட்டிக் காட்டி உங்களின் இருதய கதவை திறப்பதற்கு மறுப்பதை நம்பி ஏமாந்து போகாதீர்கள்!* **உங்கள் விசுவாசமே** *எவ்வித வறட்சியின் அல்லது காரிருளின் நேரத்தில் உங்கள் இருதய கதவை திறக்க உதவி செய்யும்! தெய்வ அன்பு உங்கள் உள்ளத்தில் பாய்ந்து முற்றிலும் உங்களை ஆட்சி செய்ய விட்டு விடுங்கள். அவரது அன்பின் ஆட்சியில், துன்பத்தின் அலை அடங்கி நிற்கும்! அவருடைய பரிபூரண அன்பு இருள் நீக்கி, ஒளி சிந்தும்!*

*இவைகளை அனுபவித்த நான் "ஓ கர்த்தாவே, உம்முடைய அன்பின் மாட்சிமையை விளங்கச் செய்திட, எனக்கு வார்த்தைகள் இல்லை! இந்த வார்த்தைகளுக்கு இறக்கைகள் இருக்குமென்றால், உம்முடைய அன்பிற்கு உயரமாய் எவ்வளவு பறந்தாலும், உம்முடைய அன்போ அதை விட மேலாய் உயர்ந்துவிடும் என்றே காண்கிறேன்!" என மண்டியிட்டு ஆறுதல் பெற்றேன்!!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## 'திருத்துதலை ஏற்க மறுப்பது' பேரிழப்பு!

***ந****ல்ல சபைகளில் அமர்ந்து, பல வருடங்களாய் ஆச்சரியமான செய்திகளை 'சபையிலும், ஆன்-லைனிலும்' கேட்டவர்களைப் பார்த்து ஆண்டவர் கூறும்போது "உங்களுக்கு என்மீது தனிப்பட்ட* **அன்பின் தியான வாழ்க்கை** *இல்லாதபடியால் உங்கள் பூமிக்குரிய வாழ்க்கை வீணாகி போய்விட்டது.* **நான் உங்களை அறியேன்!** *நீங்களும் என்னை அறியவில்லை! நீங்கள் என்னோடு இசைந்து நடந்ததுமில்லை, உங்கள் சிலுவையை நீங்கள் ஒருபோதும் எடுத்ததுமில்லை!" என்றே கூறுவார் (மத்.7:22,23). அது, மிகப்பெரிய வருத்தமாயிருக்கும்.*

*இந்த பூமியில்,* **இயேசு கிறிஸ்துவின் சபையே** *அதிக மகிழ்ச்சி நிறைந்த ஸ்தலமாய் எனக்கு இருக்கிறது. இதை போலியாய் அல்ல, என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கூறுகிறேன். அதுபோலவே, பரிசுத்தவான்களின் ஐக்கியமும் அப்படி ஒரு மதுரம் என்றே கூறுவேன்! ஆகிலும், நான் பரமபிதாவோடும் ஆண்டவராகிய இயேசுவோடும் கொண்டிருக்கும் ஐக்கியத்தைக் காட்டிலும், அவை யாதொன்றும் எனக்கு மேலானதல்ல! நான் இயேசுவோடும், பிதாவோடும் அனுபவித்து வாழும் ஐக்கியம், இந்த பூமிக்குரிய ஜீவிய காலம் முழுவதும் ஒருபோதும் துண்டிக்கப்படாது... அது தொடர்ந்து*

*நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும். இந்த ஐக்கியத்தின் அடிப்படையிலேயே நான் தேவ ஜனங்களோடு இன்றுவரை ஐக்கியம் வைத்திருக்கிறேன்!*

**ஜன சங்கத்தில் (CLUB) இருப்பவர்களோ, தங்கள் பாதுகாப்பை கர்த்தரிடத்தில் அல்ல, தங்கள் 'ஜனசங்கத்தில்' வைத்து, 'தேவ மனிதர் களின்' செய்திகளை கேட்பதில் மாத்திரமே பாதுகாப்பை கண்டவர்கள்!**

*ஜனசங்கத்தில் குழுமியிருக்கும் விசுவாசிகள், தாங்கள் தொடர்ந்து சொகுசாயிருந்து, தங்கள் சொந்த வழியை பாதுகாத்துச் செல்ல எதிர்பார்க்கிறார்கள். ஆகவேதான், அவர்கள் தொடர்ந்து 'விசேஷித்த வர்களாய்' நடத்தப்படாதிருந்தால், உடனே மனத்தாங்கல் அடைந்து விடுகிறார்கள். அவர்கள் மனுஷர்களிடமிருந்து கனத்தையும் அங்கீகாரத்தையும் நாடுகிறார்கள்! பொது இடங்களில், தங்களை 'எல்லோரும் காணும்படியாகவும்' மற்றவர்களால் 'இதமாய்' நடத்தப்படவுமே விரும்புகிறார்கள்.*

**அவர்களுக்கு ஓர் மூத்த சகோதரன் ஏதாவது ஒரு சமயங்களில் 'ஓர் திருத்துதலை கூறினால்' அவர்கள் உடனே மனம் புண்படுவார்கள்.... அதைத் தொடர்ந்து 'ஜன சங்கத்தை விட்டு' வெளியே போய்விடுவார்கள்!**

*ஒரு தேவபக்தியான, வயது சென்ற சகோதரன் என்னை திருத்தும் போது, எப்போதாவது நான் மனம் புண்பட்டால், நான் ஒரு 'ஜன சங்க கிறிஸ்தவன்' என்றே நிரூபிப்பதாக, ஆண்டவர் எனக்கு காண்பித்திருக் கிறார். ஆகவே, எந்த திருத்துதல் அல்லது கடிந்து கொள்ளுதல் நிமித்தம் நான் மனம் புண்படாதிருக்க தேவன் உதவி செய்வாராக!*

*நம்மை நேசித்து, தேவனுடைய வார்த்தையை நமக்கு அன்போடு எடுத்துப் போதிக்கும் 'தேவபக்தியான, வயது முதிர்ந்த சகோதரர்களை' மூப்பர்களாக தேவன் நமக்குத் தந்திருக்கிறார். தான் நேசிக்கும் பிள்ளைகளைத் திருத்த, தகப்பன்மார்கள் பிரம்பை கையாளுவதை அவர்கள் அறிந்திருக்கிறபடியால், கண்டித்து திருத்த ஒருபோதும் தயங்கமாட்டார்கள். அதுபோன்ற சமயங்களில், அவ்வித பக்தியான வயது சென்ற சகோதரர்கள் கூறிய புத்தியினிமித்தம்* **"நீங்கள் முரட்டாட்டம் செய்தோ அல்லது மனம் புண்பட்டோ இருந்தால்"** *அதுவே நீங்கள் "ஒரு ஜனசங்க (CLUB) மனநிலை கொண்டவர்கள்" என்பதைக் காட்டும் அடையாளமாயிருக்கிறது!*

*ஒரு தேவபக்தியான மூத்த சகோதரன் கடிந்து கொள்ளும் வார்த்தைக்கு நாம் மனம் புண்படுவோமென்றால், நாம் நிச்சயமாய் பின்மாற்ற நிலைக்கு சென்று விட்டோம்!.... ஒருவேளை, அதுவே நம்மை நரகத்திற்கு கொண்டு செல்லும் பாதையாகவும் மாறிவிடும்!*

*– சந்தோஷ் பூணன்*

***நா**ம் "ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்!" என்ற கட்டளை "தேவனை அறிந்தவர்களுக்குரிய" ராஜரீக கட்டளை யாகும்! (1யோ.4:7, யாக்கோபு.2:8). ஆகிலும், 'தேவனை அறியாத' உலகத்துக்குரியவர்களும் 'ஒருவரையொருவர் நேசத்தை' பேசுகிறார்கள் என்றும்..... உலகத்துக்குரிய மானிட அன்பிற்கே, இந்த உலகம் செவிகொடுக்கிறது! என 5-ம் வசனம் வேறு பிரித்து காண்பிக்கிறது. இரட்சிக்கப்பட்டு, சபையில் பல வருடங்களாகியும் "**இயேசுவின் சீஷனாய் மாறாத**" விசுவாசிகள், இந்த வேறுபாட்டை அறியாதபடியால், இந்த "உலக அன்பில்" சேதமடைகிறார்கள்! அது போதாமல், கிறிஸ்துவின் சபைக்கும் சேதமுண்டாக்க முயல்கிறார்கள். 'மானிட லௌகீக அன்பிற்குப்' பின்னால் இருக்கும் உலகத்தின் அதிபதியை காட்டிலும், நம்மோடிருக்கிறவர் பெரியவராயிருக்கிற படியால், **தெய்வ அன்பே என்றும் ஜெயம் பெறுமென** 4-ம் வசனத்தில் அன்பின் அப்போஸ்தலன் யோவான் தெளிவுபட கெம்பீரித்தார்!*

> **'அன்பு' தேவனுக்குரியது! எனவும், தேவனால் பிறந்தவனுக்கே அது சொந்தம்! எனவும் 7-ம் வசனம் கூறுகிறது! அப்படியிருக்க, 'மனுஷீக அன்போ' சொந்தம் - பந்தம் தொடங்கி, உலகப்பொருளை சுற்றிச் சுற்றியே 'அன்பு' என கூறிக்கொள்ளும்! அதை இன்னமும் கொச்சைப்படுத்தி "LOVE = காதல்" எனவும் கூறிக்கொள்ளும்!**

*இந்த 'காதல் - மோகம்' வாலிபர்களை மாத்திரமல்ல, திருமண மானவர்களையும் வாட்டி வதைத்து விடுகிறது! அது, காம - மோகத்திற் காக வாலாட்டிச் செல்லும் "மிருக அன்பு" என கூறலாமே அல்லாமல், புனித வேதத்தில் 'காதல்' என்ற வார்த்தைக்கு இடமே யில்லை! மனுஷீக அன்பின் உச்சக்கட்டமாய் 'ஆணோடு ஆணும்' 'பெண்ணோடு பெண்ணும்' ஒருபால் உறவு அவலட்சண தப்பிதத்திற் குள்ளும் பிரவேசிக்கிறார்கள் (ரோமர்.1:25,27). இது, சிருஷ்டிகரைப் புறக்கணித்து, சிருஷ்டியை தொழுது கொண்ட மாய - அன்பு! (ரோ.1:25).*

*'அன்பு' இன்னதென்று நாம் அறியோம்! அது, தேவனிடமிருந்தே ஆரம்பித்து, பின்பு நாம் அவரிடத்திலும், பின்பு "ஒருவரையொருவ ரிடத்திலும்" என்ற உச்சநிலை அடைவதே "அவருடைய அன்பு நம்மில் பூரணமடையும்" நிறைவாகும்! இந்த வழி செல்லாத, எதுவும் பூரணமற்ற அன்பாகிவிடும்! (1யோ.4:12).*

**முதலாவதாக,** *நாமல்ல.... "அவரே நம்மை முதலாவதாக*

*அன்புகூர்ந்தார்!" (1யோவான்.4:19). நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதில், நம்மீது வைத்த 'தெய்வ அன்பை' விளங்கிக்கொண்டோம் (ரோமர்.5:8). இந்த தெய்வ அன்பே, பாவியாகிய நம்மை இரட்சித்தது!*

**இரண்டாவதாக,** *அவர் நம்மை முதலாவது அன்புகூர்ந்தபடியால், அவர் நமக்குத் தன்னை தந்தருளிய அன்பைப்போலவே, நம்மை முழுவதும் தந்து அவரை அன்புகூருகிறோம்! இதுவே, இயேசு கற்றுத்தந்த ஒப்பற்ற சீஷத்துவ வாழ்க்கை!* **முழு இருதயமாய் தேவனை அன்புகூர்ந்து வாழும் சீஷத்துவம்!** *(1யோவான்.4:19). ஆம், பிதா நம்மையும், நாம் பிதாவையும் அவரது குமாரனையும் அன்புகூர்ந்திடும் மகிமையான வாழ்க்கை! இதை இயேசு குறிப்பிட்டு, "பிதாவே, நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த* **மகிமையை** *நான் அவர்களுக்கு கொடுத்தேன்" என யோவான்.17:22-ல் கூறினார். ஆ, இது உண்மை! பிதாவும், குமாரனும் போல.... நாம் தேவனோடு கொண்டிருக்கும் அன்பின் ஐக்கியம்! இயேசு நமக்கு வழங்கிய இந்த மகிமை ஒன்றே போதும்போல் தோன்றினாலும், நாமோ இன்னமும்* **மகிமையின்மேல் மகிமையடையும்** *வழிக்காக இயேசு ஜெபித்து.....*

**மூன்றாவதாக,** *"நாமும் ஒருமைப்பாட்டில் தேறிவரவேண்டும்" என்ற 'மகிமைமேல் மகிமை அடையும்' வாழ்விற்காக ஜெபித்தார்! (யோவான்.17:23). இந்த ஒருவரையொருவர் நேசிக்கும் "***பூரண அன்பின்***" வாழ்விற்கே, சிலுவை நமக்கு மிகவும் அவசியமாயிருக் கிறது! சுயம் சிலுவையிலறையப்பட்டு, பிறரை நேசித்து வாழ்ந்திட நடத்தும் ஒப்பற்ற சிலுவை!*

*ஒருவன் "தேவனிடத்தில் நான் அன்புகூருகிறேன்! எனக்கூறிவிட்டு தன் சகோதரனைப் பகைத்தால்.... அவன் பொய்யன், அவன் உண்மையில் தேவனை அறியவில்லை" என்பதுதான் உண்மை! என 1யோவான்.4:20 கூறுகிறது. பாவியாகிய தன்னை அன்புகூர்ந்த* **தெய்வ அன்பைப் பெற்றவன்,** *அவரை முழு இருதயமாய் அன்புகூருவான்.... அந்த அன்பு, வழிந்தோடி பிறரையும் அன்புகூர்ந்திடும்!* **மேடம் குயான் அம்மையார்** *போன்ற பக்தர்களின் வாழ்க்கை, அதற்கு ஓர் சவால்! "தெய்வ சினேகத்தில்" திளைத்து களிகூர்ந்த அந்த அம்மையார், தன்னைச் சுற்றிலும் சூழ்ந்து பகைத்த அனைவரையும் அன்புகூர்ந்து, அவர்களையும் ஆதாயப்படுத்த நாடிய பூரண தெய்வ அன்பு! மகிமைமேல் மகிமை அடையும், அந்த அன்பே ஒருக்காலும் ஒழியாது! ஆமென்.*

*– T.ரத்தினகுமார்*



# சின்ன யாக்கோபு அப்போஸ்தலன்,

## எருசலேமில் கல்லெறியுண்டு மரித்த சீஷன்

(AD 62)

இந்த சின்ன யாக்கோபு அல்பேயுவின் குமாரனாவார்! இயேசு தானே பொறுக்கி எடுத்த சீஷர்களில் இவரும் ஒருவர். இயேசு உயிர்த்தெழுந்தவுடன் இவருக்கே முதலாவதாக தரிசனமாகி, பின்பு மற்ற அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானார்! என 1கொரிந்தியர்.15:7 வசனத்தை ஆதாரமாய் கொண்டு கூறுவார்கள். இந்த யாக்கோபு தோற்றத்தில் சிறியவராயிருந்தபடியால், அவருக்கு 'சின்ன யாக்கோபு' என அழைக்கப்பட்டார். ஆகவேதான் இயேசு உயிர்த்தெழுந்தபோது "சிறியோர் முதல் பெரியோர் வரை கர்த்தரை அறிவார்கள்" என்ற புதிய உடன்படிக்கை வசனத்தின்படி, முதலாவதாக இந்த 'சின்ன யாக்கோபிற்கு' தரிசனமானார்! ஆகவே உயிர்த்தெழுந்த இயேசுவை முதலாவதாக கண்ட சீஷன் எனவும் கூறலாம்!

மற்ற எல்லா அப்போஸ்தலர்களும் உலகமெங்கும் சிதறி சுவிசேஷத்தை பிரசங்கிக்க சென்ற வேளையில் இந்த சின்ன யாக்கோபு, **இஸ்ரவேல் தேசத்தில் தங்கியிருந்து** கிறிஸ்துவை தைரியமாய் பிரகடனம் செய்தார். அங்கிருந்த யூதர்களில் அநேகர் இவர் மூலமாய் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். ஆகிலும், யூதர்களில் பெரும்பாலோர் **'உயிர்த்தெழுந்த இயேசுவை' இரட்சகராய் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள்.** இயேசுவின் சுவிசேஷத்தை அறிவித்த அவரது உறுதி தன்மையை கண்ட யூத 'கிறிஸ்தவ விசுவாசிகள்' அவரை எருசலேம் சபைகளுக்கு கண்காணிப்பாளராய் நியமணம் செய்தார்கள்.

அவ்வாறு அயராது தன் சொந்த ஜனங்களுக்கு ஊழியம் செய்த சின்ன யாக்கோபை ஒரு நாளில் எருசலேம் ஆலயத்திலிருந்து யூதர்கள் கீழே தள்ளிவிட்டு, கற்களால் எறிந்து இம்சித்தார்கள். கடைசியாக ஒருவன், ஒரு பெரிய தடியைக் கொண்டு, சின்ன யாக்கோபின் தலையில் அடித்துக் கொன்றான். அவரது உடல், அவர் மரித்த சிற்றாலயத்துக்கு அருகிலேயே புதைக்கப்பட்டது! இந்த சின்ன யாக்கோபு மரித்தபோது அவருடைய வயது 94!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ‘இயேசுவின் இனிய நாமத்திற்கு’ இணை வேறெதுவுமில்லை!

இயேசு என்ற இனிய நாமம் எந்த ஒரு உள்ளத்தில் நிலைகொண்டு நிற்கின்றதோ அந்த உள்ளம் எல்லா துர்க்குணங்களையும் வேர் அறுத்துப் புறம்பே தள்ளிவிடும்! அது சகமாந்தர்மேல் அன்பைப் பொழியச் செய்து, மோட்ச லோகத்தின் முன் ருசியைக் கொடுக்கும்! அந்த இனிய இயேசுவைக் கொண்ட உள்ளம் சண்டை சச்சரவு, பகைமைகளை அகற்றி, மாம்சத்தின் ஆசைகளைச் சுட்டெரித்து, இந்த உலகத்தின் எல்லா ஆசாபாசங்களையும், பூமிக்குரிய பொருட்களையும் துக்கத்திற்குரியதாக மாற்றி அமைக்கும்! அவரது நாமம் சமாதானத்தைப் பிறப்பித்து நித்திய இளைப்பாறுதலை அளிக்கும்!

இயேசு என்ற நாமத்தை நேசிப்போரின் உள்ளத்தை, அந்த இன்ப நாமம் ஆவிக்குரிய சந்தோஷத்தால் நிரப்பும்! அந்த அதிசய நாமத்தை, ஆசையோடு இடைவிடாமல் தீவிரமாக விரும்புவோரின் வாழ்வில், எந்த ஒரு தீவினையும் மேற்கொள்வதில்லை!

‘இயேசுவின் இன்ப நாமம்’ நிலைகொண்டிராத ஒரு மனிதன், தன் ஆவிக்குரிய வாழ்வில் வீழ்ச்சியடைவதையும், பாவ சோதனைகளை எதிர்த்து நின்று வெற்றியுடன் முன் செல்ல முடியாததையும் குறித்து நான் ஆச்சரியமடைய மாட்டேன்.

மெய்யாகவே இயேசுவின் ஒப்பற்ற நாமம், மனிதனின் மனசாட்சியை சுத்திகரித்து, அவன் இருதயத்தின் எல்லா பயங்களையும் விரட்டியடித்து, அந்த இருதயத்தை சுத்தமும், தெளிவும் கறைதிறையற்றதுமாக வைத்துக்கொள்ள உதவும்! அது அவனை உன்னதத்தின் அன்பால் அனலூட்டச் செய்து, மோட்சத்தின் இன்ப இசையை அவன் காதுகளில் தொனிக்கச் செய்திடும்!

ஓ, வாலிபனே! இந்த உலக இன்பம் யாதொன்றும் “இயேசுவின் இனிய நாமத்திற்கு” இணையானது இல்லை! உன் ஜீவிய பாதையில் சற்றே நின்று..... மனந்திரும்பி, நித்தியானந்தம் நிறைந்த இயேசுவிடம் வந்துவிடு! அவர் உன்னை இரட்சித்து, பாவம் மன்னித்து, அவரின் இனிய நாமத்தை உனக்கே சொந்தமாய் அருளுவார்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.